டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 31.07.2026 வெள்ளிக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 037 - Madurai | Online Edition

# உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட சோயா புரதச் செறிவுகளை வர்த்தகப்படுத்துவதற்காக ஆதரவு

புது தில்லி, ஜூலை 30

மதிப்புக்கூட்டப்பட்ட உணவுப் பதப்படுத்துதல் மற்றும் தாவர அடிப்படையிலான ஊட்டச்சத்தில் இந்தியாவின் தற்சார்புக்கான உறுதிப்பாட்டை வலுப்படுத்தும் வகையில், மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் கீழ் இயங்கும் தொழில்நுட்ப மேம்பாட்டு வாரியம், மத்தியப் பிரதேச மாநிலம் இந்தூரைச் சேர்ந்த சோனிக் பயோகெம் எக்ஸ்ட்ராக்சன்ஸ் நிறுவனத்திற்கு நிதியுதவி வழங்கியுள்ளது.

“செயல்பாட்டு மற்றும் அமைக்கப்பட்ட சோயா புரதச் செறிவுகளின் உருவாக்கம் மற்றும் வர்த்தகமயமாக்கல்” என்ற திட்டத்திற்காக இந்த உதவி வழங்கப்பட்டுள்ளது. இந்நிறுவனத்தால் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, செயல்பாட்டு சோயா புரதச் செறிவு மற்றும் அமைக்கப்பட்ட சோயா புரதச் செறிவு ஆகியவற்றின் வணிகரீதியான உற்பத்திக்கான ஒரு அதிநவீன உற்பத்தி மையத்தை அமைப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

ஆரோக்கியமான, நிலையான மற்றும் தூய்மையான உணவுப் பொருட்களுக்கான நுகர்வோரின் விருப்பம் அதிகரித்து வருவதன் காரணமாக, உயர்தர மற்றும் மரபணு மாற்றப்படாத தாவர அடிப்படையிலான புரதப் பொருட்களுக்கு உலகளவில் வளர்ந்து வரும் தேவையை இந்த முயற்சி பூர்த்தி செய்கிறது.

மரபணு மாற்றப்படாத சோயா உணவுப் பொருட்களை தயாரிப்பதிலும் ஏற்றுமதி செய்வதிலும் 20 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்தைக் கொண்டுள்ள சோனிக் பயோகெம் நிறுவனம், சோயா புரதச் செறிவை முதன்மை மூலப் பொருளாகப் ஒரு உள்நாட்டு செயல்முறையை உருவாக்கி உள்ளது.

# சொக்கநாதன் புத்தூரில் வயல் தின விழா



விருதுநகர், ஜூலை 30

விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் வட்டாரத்தில் சொக்கநாதன் புத்தூர் கிராமத்தில் மத்திய மற்றும் மாநில அரசு திட்டமான அட்மா திட்டத்தின் கீழ் வயல் தின விழா 100 விவசாயிகள் பயன்பெறும் வகையில் வேளாண்மை உதவி இயக்குனர் கு.தனலட்சுமி, தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் ஸ்ரீவில்லிபுத்தூர் பருத்தி ஆராய்ச்சி நிலையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் ஜோதிமணி, சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு நெல் சாகுபடி விவசாயிகளுக்கு பயிரில் உரத் தேவையை தெரிந்து கொள்ள இலை வண்ண அட்டை பயன்படுத்துதல், சமச்சீர் உரம் இடுதல், மண்வள அட்டை பயன்பாடுகள் மற்றும் எல் – நினோ காலநிலை மாற்றம் அதற்கு ஏற்ப பயிர்களை தேர்வு செய்தல் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். மேலும் விருதுநகர் மாவட்டம், உழவர் பயிற்சி நிலையம், வேளாண்மை அலுவலர் கார்த்திகா, பேசுகையில் பாரத பிரதமரின் விவசாயிகளுக்கான கௌரவ நிதி பெறும் விபரம், நில உடமை பதிவு செய்வது குறித்து விரிவாக விளக்கினார்.

சகோதரத்துறையான தோட்டக்கலைத்துறை சார்பாக கலந்து கொண்ட கோபி கண்ணன், தோட்டக்கலை அலுவலர், தோட்டக் கலைத் துறை மூலம் செயல்படுத்தப்படும் அரசு மானியங்கள் குறித்து எடுத்துரைத்தார். வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனை கூடம் சுமதி, கலந்து கொண்டு லாபக் காய் இல்லாமல் ள ஹிபுனி முறையில் தேங்காய் கொள்முதல் செய்தல் வேளாண் விளை பொருட்கள் மீது வட்டி இல்லா கடன் ஆகியவை குறித்து விவசாயி களுக்கு விளக்கம் அளித்தார். வேளாண்மை துறை சார்பாக தற்போது காரிப் பருவத்திற்கு Co 55, ADT-54, Co 51, ASD -16 ஆகிய நெல் ரகங்களின் இருப்பு மற்றும் மானியங்கள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். இதற்கான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் ரமேஷ் மற்றும் வட்டார தொழில் மேலாளர் நாராயணன், உதவி தொழில் நுட்ப மேலாளர்கள் ஜான் பாண்டியன், பத்மாவதி ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# இளைஞர்களை தொழில்முனைவோராக்கும் காளான் வளர்ப்பு பயிற்சி



திருச்சி, ஜூலை 30

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தின் கீழ் இயங்கும் சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் மூலம் விவசாயிகளுக்கு பல்வேறு பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்வுகள் வழங்கப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக இளை–ஞர்களை தொழில்முனைவோராக்கும் முக்கிய துறையாக விளங்கும் காளான் வளர்ப்பு குறித்த ஒரு நாள் பயிற்சி சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நடைபெற்றது.

இந்தப் பயிற்சியில் சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ந.புனிதவதி பயிற்சியை துவக்கி வைத்து இளைஞர்களை தொழில்முனைவோராக்குவதில் காளான் உற்பத்தி பெரும் பங்கு வைக்கிறது என கூறினார். வேளாண்மை அறிவியல் நிலைய உதவிப்பேராசிரியர் (பயிர் நோயியல்) முனைவர் கண்ணன், உணவுக் காளான் மற்றும் நச்சுக் காளானை வகைப்படுத்துதல், காளான் வளர்ப்பின் முக்கியத்துவம், காளானின் நன்மைகள், காளான் படுக்கை தயாரிப்பு, சிப்பி காளான் வளர்ப்பு, காளானை பராமரித்தல் போன்ற தலைப்புகளின் கீழ் தொழில்நுட்ப உரை வழங்கினார். மேலும் காளான் வளர்ப்பில் ஏற்படும் பிரச்சனைகள் மற்றும் அவற்றின் தீர்வுகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். பின்னர், காளான் படுக்கை தயாரித்தல் மற்றும் காளானில் மதிப்பு கூட்டப்பட்ட பொருள்கள் தயாரிப்பு குறித்து செய்முறை விளக்கம் செய்து காட்டப்பட்டது.

காளான் வளர்ப்பில் சாதனை தொழில்முனைவோரான பிரிய தர்ஷினி, தனது அனுபவங்களை விவசாயிகளிடம் பகிர்ந்தார். காளான் மதிப்பு கூட்டுதலில் சாதனை தொழில்முனைவோராக விளங்கும் எட்வின்நகோமி, காளானில் மதிப்புகூட்டப்பட்ட பொருட்கள் தயாரிப்பு குறித்து தெளிவாக எடுத்துரைத்தார். இணை பேராசிரியர் முனைவர் ராதிகா, காளான் சந்தைப்படுத்துதல் குறித்து விளக்கினார். பயிற்சியில் திருச்சி, கரூர், அரியலூர், கடலூர், ராம நாதபுரம், கும்பகோணம் மற்றும் தஞ்சாவூர் மாவட்டத்தை சேர்ந்த 90க்கும் மேற்பட்ட இளைஞர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# வகை வகையான சூப் தொடர்...

# சூப் செய்வது எப்படி?



**3. கேரட் சூப்**

**தேவையான பொருட்கள்**

கேரட் — 3

வெங்காயம் — 1

பூண்டு — 2 பல்

வெண்ணெய் — 1 டீஸ்பூன்

மிளகு தூள் — ½ டீஸ்பூன்

உப்பு — தேவையான அளவு


**செய்முறை**

கேரட்டை வேக வைத்து அரைக்கவும். வெண்ணெயில் வெங்காயம், பூண்டு வதக்கி அரைத்த கலவையை சேர்த்து 5 நிமிடம் கொதிக்கவிட்டு பரிமாறவும்.

தொகுப்பு : ***G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.***

**நாளை தொடரும்...**

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**



# அயோத்தியாபட்டிணம் வட்டாரத்தில் வேளாண்மை இணை இயக்குனர் ஆய்வு



சேலம், ஜுலை 30

சேலம் மாவட்டம், அயோத்தியாபட்டிணம் வட்டாரத்தில், காரிப்பட்டி குறு வட்டத்தில், காரீப் பருவத்தில் பிரதம மந்திரியின் பயிர் காப்பீடு திட்ட விழிப் புணர்வு முகாம் நடைபெற்றது.

காரிப்பட்டி குறு வட்டத்தில், பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு மற்றும் சேகரிப்பு மையத்தில் மதிப்பிற்குரிய சேலம் மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் கு.சீனிவாசன், அதி காலையில் பால் கொள்முதல் விவசாயிகளை சந்தித்து எல்–நினோ பாதிப்பால் பயிர் கருகிக்கொண்டிருப்பதால் சோளம் மற்றும் நிலக்கடலை பயிருக்கு பிரதம மந்திரியின் பயிர் காப்பீடு திட்டத்தில், சோளம் பயிருக்கு ஏக்கருக்கு ரூ.204/–ம், நிலக் கடலை பயிருக்கு ஏக்கருக்கு ரூ.447/–ம் பிரிமியத் தொகை செலுத்தி பயிர் காப்பீடு செய்து பயன்பெற விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

நில அடங்கல், நில உரிமை பட்டா, ஆதார் எண், வங்கி கணக்கு எண் ஆகிய ஆவணங்களுடன் அருகே உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம், வணிக வங்கி மற்றும் பொது சேவை மையம் மூலமாக விவசாயிகள் பணம் செலுத்தி, பயிர் காப்பீடு செய்து கொள்ள வேண்டும்.

பிரிமியத் தொகை செலுத்த ஆகஸ்ட் மாதம் 17.08.26 அன்றே கடைசி நாளாகும் என விளக்கம் அளித்தார். மேலும் முகாமில் அயோத்தியாபட்டிணம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் ப.சண்முகப்பிரியா, துணை வேளாண்மை அலுவலர் மா.பிரபாகரன் மற்றும் காரிப்பட்டி பகுதி உதவி வேளாண்மை அலுவலர் செ.கவிபாரதி ஆகியோர் பங்கேற்றனர்.

# மக்காச்சோள வயல்வெளிப் பண்ணைப் பள்ளி வேளாண்மை இணை இயக்குனர் பங்கேற்பு



ஈரோடு, ஜூலை 30

ஈரோடு மாவட்டம், அந்தியூர் வட்டாரம் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் கெட்டிமுத்திரம் கிராமத்தில் மக்காச்சோளப் பயிரில் வயல்வெளி பண்ணைப் பள்ளி பயிற்சி 29.07.26 அன்று நடத்தப்பட்டது. இப்பயிற்சியில் ஈரோடு மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் இரா.சிவக்குமார் கலந்து கொண்டு விவசாயி களுக்கு மக்காச்சோளம் பயிர் சாகுபடி தொழில்நுட்பங்கள், தொழு வுரம் இடுதல், விதை நேர்த்தி செய்து விதைப்பு மேற்கொள்ளுதல் மற்றும் மண் பரிசோதனை செய்து அதன் அடிப்படையில் உரம் இடுதல், உயிர் உரங்களை பயன்படுத்துதல் மற்றும் மண்ணில் அங்க கரிமத்தை அதிகரிப்பதற்கான வழிமுறைகள் குறித்து தெளி வாக எடுத்துக் கூறினார். வேளாண்மை துறை சார்பாக செயல் படுத்தப்படும் திட்டங்கள் குறித்து அந்தியூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் தூ.தே.முரளி, விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினர். கோபி வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானி சீனிவாசன், மக்காச்சோளப் பயிரை அதிகமாக தாக்கும் படைப் புழுவை கட்டுப்படுத்த கோடை உழவு செய்து கூட்டுப்புழுவை அழித்தல், இன கவர்ச்சி பொறி அமைத்தல், பொறிப்பயிராக தட்டைப் பயிர் சாகுபடி செய்தல் மற்றும் பூச்சிக்கொல்லிகலை பரிந்துரைக்கப்பட்ட அளவுகளில் மட்டுமே தெளிக்க விவசாயி களுக்கு அறிவுரை வழங்கினார். குமரகுரு வேளான் கல்லூரி உதவி பேராசிரியர் முனைவர் சங்கீதா, களை மேலாண்மை, சமச்சீராக உரங்கள் இடுதல் மற்றும் பயிர் சுழற்சி செய்வது குறித்து விவசாயி களுக்கு பயிற்சி அளித்தார். வயல்வெளிப் பள்ளியின் ஒரு பகுதியாக வேளாண்மை இணை இயக்குனர் இரா.சிவக்குமார், விஞ்ஞானிகள் அதிகாரிகள் மற்றும் விவசாயிகள் மக்காச்சோள வயலுக்கு சென்று மக்காச்சோளப் பயிரை தாக்கும் பூச்சிகள் மற்றும் நன்மை செய்யும் பூச்சிகள் குறித்து வயல் ஆய்வு மேற்கொண்டார். இப்பயிற்சிக்கான ஏற்பாட்டினை வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் விக்னேஷ் மற்றும் பூபதி ஆகியோர் செய்துள்ளனர். இப்பயிற்சியில் கெட்டிசமுத்திரம் கிராமத்தை சேர்ந்த 30க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.


Rithvik Pipe
25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன்
கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்
ISI
தரச் சான்றிதழ் பேப்பரில் மட்டுமல்ல பைப்பிலும்
பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்
25 ஆண்டுகள் உத்தரவாதம்
நம்பிக்கைக்கு அடையாளம்
100% LEAD-FREE பைப்புகள்
ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
ISI சான்று பெற்ற பைப்புகள்
தரத்திற்கு ஒரே அடையாளம்
ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
67 GRADE மூலப்பொருட்கள்
அதிக வலிமை, நீண்ட ஆயுள்
TEST CERTIFICATE – QR CODE மூலமாக
ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
FREE ON-SITE TESTING
விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
சரியான எடை, தடிமன்
ஏமாற்றமில்லா தயாரிப்பு
PRODUCT RANGES
ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes)
ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80)
ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy)
ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG)
ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm
PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK
RITHVIK PIPES PROUDLY TRUSTED BY
LMW
isha
Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com
POWERGRID
BHEL
Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com
For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# பருத்தி, நெல் பயிரில் விதை உற்பத்தி மற்றும் விதைநேர்த்தி தொழில்நுட்பங்கள் பற்றிய வெளிவளாக பயிற்சி




கடலூர், ஜூலை 30

கடலூர் மாவட்டம், விருத்தாசலம், வேளாண்மை அறிவியல் நிலையம் சார்பாக 29.07.26 அன்று குமராட்சி வட்டாரம், குமராட்சி கிராமத்தில் பருத்தி, நெல் பயிரில் விதை உற்பத்தி மற்றும் விதை நேர்த்தி தொழில்நுட்பங்கள் பற்றிய வெளிவளாக பயிற்சி நடைபெற்றது. விருத்தாசலம், வேளாண்மை அறிவியல் நிலைய மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் க.நடராஜன், துவக்கி வைத்தார்.

வேளாண்மை துணை இயக்குநர், அமிர்தராஜ் (மத்திய திட்டம்), இப்பயிற்சிக்கு தலைமை தாங்கினார். விருத்தாசலம் வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானி முனைவர் கோ.சத்தியநாரயணன், கலந்துக் கொண்டு நெல் மற்றும் பருத்தியில் விதை உற்பத்தி தொழில்நுட்பங்கள் குறித்து எடுத்துரைத்தார்.

மேலும் விதைசான்றளிப்பு மற்றும் உயிர்மசான்றளிப்பு துறை நடனசபாபதி, கலந்துக் கொண்டு விதை உற்பத்தி தொழில் நுட்பங்கள் பற்றி எடுத்துரைத்தார். இப்பயிற்சியில் நெல் மற்றும் பருத்தி பயிருக்கான பல்வேறு விதை நேர்த்தி செயல் முறைகளை விளக்கி, செயல்முறைகள் செய்து காண்பிக்கப் பட்டது. இந்த பயிற்சி முகாமில் விதை அமிர்தம், உயிர் உரங்கள் மற்றும் வளர்ச்சி ஊக்கியின் முக்கியத்துவங்கள் மற்றும் பயன்படுத்தும் முறைகள் எடுத்துரைக்கப்பட்டது. இப்பயிற்சியில் குமராட்சி வேளாண்மை உதவி இயக்குநர் தெ.தமிழ்வேல் கலந்துக் கொண்டு வரவேற்புரை மற்றும் நன்றியுரை வழங்கினார். வேளாண்மை அலுவலர் நடராஜன், உதவி வேளாண்மை அலுவலர் பீரவின், சின்னசாமி, திவாகர், வட்டார தொழில்நுட்ப மேலாளர் கல்பனா, உதவி தொழில்நுட்ப மேலாளர் எட்வின் ஆகியோர் கலந்துக் கொண்டனர்.

இப்பயிற்சியில் கடலூர் மாவட்டம், குமராட்சி வட்டாரம், குமராட்சி கிராமத்தை சேர்ந்த 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துக் கொண்டு பயன்பெற்றனர்.

# ஆடிப்பட்டம் தேடி விதை – ஓர் பார்வை

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் நெல், சோளம், கம்பு, மக்காச்சோளம், பயறு வகை பயிர்கள், பருத்தி மற்றும் எண்ணெய்-வித்து பயிர்களான எள், நிலக்கடலை ஆகியவை அதிகமான பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

தமிழகத்தில் ஆனி, ஆடி மற்றும் ஆவணி என்ற மூன்று மாதங்களே மிதமான மழை பொழியும் மாதம் என்பதால் இவைதான் வேளாண்மைக்கான மாதங்கள் எனப்படுகிறது. அதிலும் ஆடியில் விதை விதைப்பது அற்புதமான விளைச் சலைத் தரும் என்பது பன்னெடுங்காலமாக விவசாயிகளிடையே இருந்து வரும் நம்பிக்கை. விட்டு விட்டு பெய்யும் ஆடிமாத மழை விதைகள் வளர நல்ல சூழலை உருவாக்குகிறது. குறிப்பாக ஆடி-18ம் நாளும் அதன் பின்னர் வரும் நாட்களும் விதை விதைப்பதற்கு ஏற்ற காலமாக இருக்கிறது. ஆடிப்பட்டம் தேடி விதை என்னும் பழமொழிக்கேற்ப துவரை, ஆடிப்பட்ட சோளம், எண்ணெய் வித்துப் பயிர்களான நிலக்கடலை மற்றும் காய்கறி பயிர்களை சாகுபடி செய்யலாம். மேலும் எதிர் வரும் கார்த்திகை மற்றும் சம்பா பட்டத்திற்கு தேவையான சோளம், மக்காச்சோளம், நிலக்கடலை மற்றும் நெல் விதை மாதிரிகளை பகுப்பாய்வு செய்து விதைகளின் தரத்தினை உறுதி செய்து கொள்ள இதுவே சரியான தருணமாகும்.

இருமடங்கு விளைச்சலை பெற்றிட மிக முக்கியமானது தரமான விதையாகும். தரமான விதையே நல்விளைச்சலுக்கு அடிப்படை ஆதாரம். தரமான விதையை பயன்படுத்தினால் மட்டுமே நல்ல தெளிவான, வாலிப்பான, அதிக வேர் பிடிப்பு மற்றும் பூச்சி, நோய் எதிர்ப்புச்சக்தி மிக்க நாற்றுகள் நமக்கு கிடைக்கும். விதைகள் தரமானதாக உள்ளதா என்பதை கண்டறிந்து விதைத்திட வேண்டும். தரமான விதைகள் மூலமே சரியான பயிர் எண்ணிக்கையை பராமரிக்க முடியும். சரியான பயிர் எண்ணிக்கை இருந்தால் தான் அதிக மகசூல் எடுக்க முடியும் என்பது நாம் எல்லோரும் அறிந்த ஒன்றாகும். இதனால் தரம் குறைந்த விதைகளை நடவு செய்வதன் மூலம் ஏற்படும் மகசூல் இழப்பைக் குறைக்கலாம்.

இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த நல்ல விதையை தேர்வு செய்திட தங்களிடம் உள்ள விதைகளை பரிசோதனை செய்து கொள்வது மிகவும் அவசியமாகும்.

எனவே விவசாயிகள் தங்கள் சாகுபடிக்கான விதை குவியலில் இருந்து மாதிரி விதைகளை குறைந்தபட்சமாக நெல் – 100 கிராம், உளுந்து, பாசிப்பயறு – 150 கிராம், நிலக்கடலை, மக்காச்சோளம் – 200 கிராம், எள், ராகி – 25 கிராம் ஆகிய அளவில் எடுத்து தங்களது முழு முகவரியுடன் கூடிய கடிதத்துடன் திருச்சி புத்தூர் ஒருங்கிணைந்த விதை சான்று மற்றும் உயிர்மச் சான்றளிப்பு அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள விதை பரிசோதனை நிலையத்தில் நேரில் கொடுக்க வேண்டும்.

விதை பரிசோதனை நிலையத்தின் மூலம் விதையின் தரங்களான புறத்தூய்மை, முளைப்புத்திறன், ஈரப்பதம் மற்றும் பிற ரக கலப்பு போன்றவற்றை பகுப்பாய்வு செய்து விதையின் தரத்தை உறுதி செய்து கொள்ளலாம். விதைகளின் தரம் பற்றி அறிந்து கொள்ள ஒரு விதை மாதிரிக்கு ஆய்வு கட்டணமாக ரூ.80/- மட்டுமே செலுத்த வேண்டும். விவசாயிகள் மற்றும் விதை விற்பனையாளர்கள் உட்பட அனைவரும் அவர் தம் விதை மாதிரியை நேரடியாக விதை ஆய்வகத்தில் கொடுத்து விதையின் தரத்தை உறுதி செய்து கொள்ளலாம்.

எனவே விதைக்கும் முன் விதைகளை பகுப்பாய்வு செய்து தரமான விதைகளை பயன்படுத்தி விதைத்திட திருச்சி விதை பரிசோதனை அலுவலர் ஆ.லீமா ரோஸ், வேளாண்மை அலுவலர்கள் ந.சி.அனிதா மற்றும் இரா.புவனேஸ்வரி ஆகியோர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# வட்டார விவசாயிகள் ஆலோசனைக்குழுக் கூட்டம்



மதுரை, ஜூலை 30

மதுரை மாவட்டம், சேடபட்டி வட்டாரத்தில் வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் விவசாயிகள் ஆலோசனைக் குழு கூட்டம் 30.07.26 அன்று வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்க்கு வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) மணிமேகலை, பேசுகையில் புதிய தொழில்நுட்பங்கள் பற்றியும், மத்திய மாநில திட்டங்கள் பற்றியும் வேளாண்மைத் துறையில் செயல்படுத்தபடும் திட்டங்களில் விவசாயிகள் அனைவரும் பயன் பெற வேண்டும் என்றும் கூறினார்.

துணை வேளாண்மை அலுவலர் பெருமாள், நானோ யூரியா பயன்பாடுகள் பற்றியும் பயன் படுத்தும் முறைகள் பற்றியும், மானிய விபரங்கள் பற்றியும் எடுத்துக் கூறினார். சேடபட்டி தோட்டக் கலை உதவி இயக்குநர் பிரதீபா, தோட்டக்கலை மானிய திட்டங்கள் பற்றி எடுத்துரைத்தார்.

தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்ட தொழில்நுட்ப மேலாளர் ச.கணேசராஜா கலந்து கொண்டு அட்மா திட்டங்கள் பற்றியும் செயல்பாடுகள் பற்றியும் எடுத்து கூறினார். உதவி தொழில்நுட்ப மேலாளர் பிரித்திவிராஜன், ஸ்ரீ செ.சத்யா ஏற்பாடுகளை செய்திருந்தனர்.



# மீளுருவாக்க விவசாயம் (REGENERATIVE AGRICULTURE) என்றால் என்ன?

விவசாயம் இன்று ஒரு குறுக்குச் சாலையில் நிற்கிறது. ஒருபுறம் பாரம்பரிய முறைகளின் மீதான நம்பிக்கை மறுபுறம் இரசாயன உரங்களும் பூச்சிக் கொல்லிகளும் சார்ந்த நவீன வேளாண்மை. ஆனால் இந்த இரண்டிற்கும் இடையே நம்முடைய மண் தான் ஒரு ஆபத்தான நிலையை நோக்கி நகர்கிறது என்பது தான் உண்மை.

**மண்ணின் இன்றைய நிலை.?**

சமீபத்திய ஜூன் 2026 ஆய்வுகளின்படி இந்தியாவில் 30% மேற்பட்ட நிலங்கள் சீரழிவுக்கு உள்ளாகியுள்ளதாக தரவுகள் உள்ளன. மண்ணில் நைட்டிஜன் அளவு 5% குறைவாகவும் மண்ணின் கரிம கார்பன் அளவு (ORGANIC CARBON) 0.54% கீழேயும் சரிந்து விட்டன.

**இன்றைய வளிமண்டல நிலமை?**

கடந்த 100 ஆண்டுகளுக்கு முன்பு வளிமண்டல த்தில் கார்பன்-டை-ஆக்சைடு அளவு 290 பி.பி.எம்-யாக இருந்தது. ஆனால் இன்று அது 430 PPM-யை தாண்டி உள்ளது. 100 ஆண்டுகளில் 60% உயர்ந்த வெப்பம், நாம் இயற்கை வேளாண்மை பற்றி பேசும் சூழலை உருவாக்கி விட்டது.

**மீளுருவாக்க வேளாண்மை.?**

மீளுருவாக்க வேளாண்மை என்பது நம்பிக்கையோ அல்லது ரசாயன நிறுவனங்கள் நடத்தும் ஒரு மறைமுக விவசாய முறையோ கிடையாது.

1960களில் வில்லியம் ஆல்பிரட் என்ற மண்ணியல் விஞ்ஞானி மூலமாக உயிர் பெற்ற ஒரு விவசாய முறை.

மண்ணின் ஆரோக்கியத்தை மீட்டெடுக்கவும், பல்லுயிர் பெருக்கத்தை மேம்படுத்தவும் இயற்கையான சூழலை பாதுகாக்க உதவும் ஒரு வேளாண் முறையாகும்.

**இதனுடைய முக்கிய அம்சங்கள்?**

**1) குறைந்த உழவு (NOTILLAGE/ REDUCED TILL)**

மண்ணை அதிகமாக ஆழமாக உழாமல், மண்ணில் உள்ள நுண்ணுயிர்கள் மற்றும் கரிம பொருட்களின் இயற்கையான அமைப்பை பாதுகாத்தல்

**2) மூடு பயிர் (COVER CROPS)**

நிலம் எப்போதும் தரிசாக இல்லாமல் ஆண்டு முழுவதும் ஏதாவது ஒரு பயிர் சுழற்சி முறையில் சாகுபடி செய்து நிலப் போர்வை (நிலம் மூடப்பட்டு) இருப்பதை உறுதி செய்து மண் அரிப்பை தடுத்தல். அதுமட்டுமல்ல, சத்துமிக்க மேல் மண்ணை பாதுகாத்தல்

**3) பயிர் சுழற்சி (CROP ROTATION)**

ஒரே பயிரை மீண்டும் மீண்டும் பயிரிடாமல் வெவ்வேறு விதமான பயிர்களை மாற்றி மாற்றி பயிரிடுதல்


**4) விலங்கின ஒருங்கிணைப்பு (LIVESTOCK)**

கால்நடைகளை வயல்வெளியில் மேய விடுவதன் மூலமாக இயற்கையாகவே மண்ணிற்கு சாணம், சிறுநீர் கிடைக்கிறது.

இன்றைய காலநிலை மாறுபட்டால் வழக்கமான சாகுபடி முறைகளை பின்பற்றாமல் அதிக வறட்சியை தாங்க கூடிய பயிர்களை சாகுபடி செய்தால் கடுமையான நஷ்டத்தில் இருந்து தப்பிக்கலாம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**




# தென்னை வேர்வாடல் (ரூட் வில்ட்) நோயின் ஒருங்கிணைந்த மேலாண்மை குறித்த வெளிச்சார் விழிப்புணர்வு நிகழ்ச்சி



தென்காசி, ஜூலை 30

தென்னை வேர்வாடல் (ரூட் வில்ட்) நோயின் ஒருங்கிணைந்த மேலாண்மை குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடை பெற்றது. விவசாயிகள் மற்றும் தோட்டக் கலை மாணவர்களுக்காக, இந்திய வேளாண் ஆராய்ச்சி மன்றத்தின் (ICAR) மத்திய தோட்டப் பயிர்கள் ஆராய்ச்சி நிறுவனம் (CPCRI), காயம்குளம் சார்பில் தென்னை வேர்வாடல் (ரூட் வில்ட்) நோயின் ஒருங்கிணைந்த மேலாண்மை குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப் பட்டது. நிகழ்ச்சியில், நோயை அறிவியல் அடிப்படையில் நிர்வகிக்கும் முறைகள், ஒருங்கிணைந்த பயிர் ஆரோக்கிய மேலாண்மை தொழில்நுட்பங்கள் மற்றும் தென்னை சாகுபடியின் உற்பத்தித் திறன் மற்றும் நீடித்த நிலைத்தன்மையை மேம்படுத்தும் நிலையான சாகுபடி நடைமுறைகள் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

கலசலிங்கம் அறிவியல் மற்றும் ஆராய்ச்சி அகாடமியின் டாக்டர் வி.விஜய பிரபா, உதவி பேராசிரியர் (CRP) மற்றும் டாக்டர் எஸ்.விஜயகுமார், தோட்டக்கலைத் துறைத் தலைவர் ஆகியோரின் வழிகாட்டுதலின் கீழ், மாணவிகள் எம்.அபர்ணா உன்னித்தன், ரசக்னா கே., கார்த்திகாஸ்ரீ எம்., மற்றும் அனிதா ஜி. ஆகியோர் இந்நிகழ்ச்சியில் பங்கேற்று, தென்னையில் வேர்வாடல் (ரூட் வில்ட்) நோயை திறம்படக் கட்டுப்படுத்துவதற்கான ஆராய்ச்சி அடிப்படையிலான தொழில்நுட்பங்கள் குறித்து பயனுள்ள அறிவைப் பெற்றனர். இந்நிகழ்ச்சி அறிவியல் விழிப்புணர்வை மேம்படுத்துவதோடு, நிலையான நோய் மேலாண்மை நடைமுறைகளை ஊக்குவித்து, ஆராய்ச்சியாளர்கள், மாணவர்கள் மற்றும் விவசாயிகளுக்கிடையேயான அறிவுப் பரிமாற்றத்தை வலுப்படுத்தும் சிறந்த தளமாக அமைந்தது.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# பீட்ரூட்டில் 'பிளாக் ஹார்ட்' (Black Heart) - கால்சியம் குறைபாடா?

பீட்ரூட் சாகுபடியில் சில நேரங்களில் கிழங்கின் உள்பகுதி கருமையாக மாறி அழுகும் நிலை காணப்படுகிறது. இதனை பலரும் 'பிளாக்ஹார்ட்' (Black Heart) என்று அழைக்கின்றனர்.

ஆனால், பீட்ரூட்டில் காணப்படும் இந்த உள்கருப்பு (Internal Black Spot/Brown Heart/Black Heart) கால்சியம் குறைபாட்டால் ஏற்படுவதில்லை. இது பெரும்பாலும் போரான் (Boron) சத்துக் குறைபாட்டினால் ஏற்படும் என்பதே அறிவியல் உண்மை. கால்சியம் குறைபாட்டால் 'Black Heart' என்ற பெயரில் ஏற்படும் நோய் செலரியில் (Celery) காணப்படுவது வழக்கம். ஆனால் பீட்ரூட்டில் இதேபோன்ற அறிகுறிகளுக்கு முக்கிய காரணம் போரான் குறைபாடாகும்.

**ஏன் போரான் முக்கியம்?**

போரான் என்பது தாவர வளர்ச்சிக்குத் தேவையான நுண்ணூட்டச்சத்து. இது,

- புதிய செல்கள் உருவாக
- வேர் மற்றும் கிழங்கு சீராக வளர
- சர்க்கரை இடமாற்றம் நடைபெற
- செல்சுவர் வலிமை பெற
- வளர்ச்சி முனைகள் ஆரோக்கியமாக இருக்க

முக்கிய பங்கு வகிக்கிறது. போரான் குறைவானால் வளர்ந்து கொண்டிருக்கும் திசுக்கள் முதலில் பாதிக்கப்படுகின்றன.

**இலைகளில்**

- இளம் இலைகள் சிறியதாக காணப்படும்.
- இலைகள் தடிமனாகவும் சுருங்கியதாகவும் இருக்கும்.
- புதிய இலைகளின் நுனிபழுப்பு அல்லது கருப்புநிறமாக மாறும்.
- வளர்ச்சி முனை பாதிக்கப்பட்டு செடியின் வளர்ச்சி தடைபடும்.

**கிழங்கில்**

- வெளிப்புறத்தில் சிறிய கருப்பு புள்ளிகள் தோன்றலாம்.
- கிழங்கை வெட்டிப்பார்த்தால் உள்ளே கருமை அல்லது பழுப்புநிற இறந்த திசுக்கள் காணப்படும்.
- கடுமையான நிலையில் முழுக்கிழங்கும் அழுகத் தொடங்கும்.
- சந்தைத்தரம் மிகவும் குறையும்.

**எந்த சூழலில் அதிகம் ஏற்படும்?**

**பின்வரும் சூழ்நிலைகள் போரான் குறைபாட்டை அதிகரிக் கின்றன :**

- மணற்பாங்கான மண்
- அதிக மழையால் போரான் கழுவிச் செல்லுதல்
- நீண்ட வறட்சி
- மண்ணின் pH அதிகமாக இருத்தல்
- அதிக அளவு சுண்ணாம்பு பயன்படுத்துதல்
- சமநிலையற்ற உர மேலாண்மை

**தடுப்பு மற்றும் மேலாண்மை**



**1. மண் பரிசோதனை**

சாகுபடிக்கு முன் மண்பரிசோதனை செய்து போரான் அளவை அறிந்து உரமிட வேண்டும்.

**2. மண் மூலம்**

போராக்ஸ் (Borax) 10-15 கிலோ / ஹெக்டேர் அல்லது பரிந்துரைக்கப்பட்ட போரான் உரங்களை மண்ணில் இடலாம்.

**3. இலைத்தெளிப்பு**

0.2% போரிக் அமிலம் (Boric acid) கரைசலை 2-3 முறை, 10-15 நாள் இடைவெளியில் தெளிக்கலாம்.

**4. நீர் மேலாண்மை**

● சீரான ஈரப்பதத்தை பராமரிக்க வேண்டும்.

● அதிக வறட்சியும், திடீர் அதிக நீர்ப்பாசனமும் தவிர்க்கப்பட வேண்டும்.

**5. சமச்சீர் உரமிடல்**

NPK உரங்களுடன் நுண்ணூட்டச் சத்துகளையும் சமநிலை யாக வழங்க வேண்டும்.

**விவசாயிகள் கவனத்திற்கு**

பீட்ரூட்டில் கிழங்கின் உள்ளே கருப்பு நிறம் காணப்படுவதைக் கண்டு பலர் கால்சியம் உரங்களைப் பயன்படுத்துகின்றனர். இது சரியான தீர்வு அல்ல. முதலில் மண் அல்லது தாவரத் திசு பரிசோதனை செய்து, போரான் குறைபாடு உறுதி செய்யப் பட்டால் மட்டுமே போரான் உரங்களை சரியான அளவில் பயன்படுத்த வேண்டும். அதிகப்படியான போரான் கூட பயிருக்கு நச்சுத்தன்மையை ஏற்படுத்தும்.

தகவல் : ***குளோரி.கே.எஸ் மற்றும் சி.பிரசாத், உதவி பேராசிரியர்கள் (மண் அறிவியல் மற்றும் வேளாண் வேதியியல் துறை), கிருஷ்ணா வேளாண்மை மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி, உசிலம்பட்டி, மதுரை மாவட்டம்.***

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# மேம்படுத்தப்பட்ட நெல் சாகுபடி தொழில் நுட்பங்கள் குறித்த பயிற்சி

கள்ளக்குறிச்சி, ஜுலை 30

கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் வட்டம், விரியூர் கிராமத்தில் காளசமுத்திரம் வேளாண் அறிவியல் நிலையம் மூலம் நெல்லில் அதிக மகசூல் பெறுவதற்காக உயர் தொழில் நுட்பங்கள் குறித்த பயிற்சி 28.07.26 அன்று நடைபெற்றது.



லூர்து சேவியர், வரவேற்புரை ஆற்றினார். இந்த பயிற்சிக்கு விரியூர் விவசாயிகள் சங்கத் தலைவர் ஆரோக்கிய அமல்ராஜ் தலைமை தாங்கினார்.



விரியூர் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் எலியாஸ், முன்னிலை வகித்தார். வேளாண் அறிவியல் மையத்தின் உழவியல் தொழில்நுட்ப வல்லுனர் மகேஸ்வரன், கலந்து கொண்டு விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தார்.

இந்த பயிற்சியில் மேம்படுத்தப்பட்ட புதிய நெல் ரகங்கள் மற்றும் பாரம்பரிய நெல் ரகங்கள் மற்றும் அதன் சிறப்பியல்கள் குறித்தும் விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது. மேலும் எல் நினோ தாக்கத்தில் நெல் பயிரில் செயல்படுத்தக்கூடிய பயிர் மேலாண்மை உத்திகள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கப்பட்டது. நாற்றங்கால் அமைப்பு மற்றும் மேலாண்மை, நடவு நிலம் தயாரித்தல் பசுந்தாள் உரப்பயிர்கள் பயன்பாடு, இயற்கை மற்றும் உயிர் உரங்கள் இடுதல் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை முறைகள், நீரை எவ்வாறு சிக்கனமாக பயன்படுத்தி அதிக மகசூல் பெறுவது, ஒருங்கிணைந்த களை மேலாண்மை முறைகள் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

மேலும் நேரடி நெல் விதைப்பு தொழில்நுட்பம் மூலம் எவ்வாறு நெல் சாகுபடி செய்யலாம் என்பது குறித்தும் விவசாயிகளுக்கு விளக்கப்பட்டது.

இந்த பயிற்சியின் ஒரு பகுதியாக பாரம்பரிய நெல் ரகங்கள் கண்காட்சி விவசாயிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. மேலும் எல் நினோ தாக்கத்தில் நெற்பயிர்களை எவ்வாறு சாகுபடி செய்வது குறித்த தொழிநுட்ப கையேடு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. இறுதியாக தோட்டக்கலை தொழில்நுட்ப வல்லுனர் முனைவர் தீபிகா கிருஷ்ணவேணி, நன்றியுரை ஆற்றினார்.

# கிராமசபைக் கூட்டத்தில் மண்பரிசோதனை பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்திய மாணவிகள்

தென்காசி, ஜூலை 30

தென்காசி மாவட்டம், வாசுதேவநல்லூர் ஊராட்சி ஒன்றியத் திற்குட்பட்ட சுப்பிரமணியபுரம் கிராமத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில், கலசலிங்கம் பல்கலைக்கழக வேளாண்மைக் கல்லூரியின் இறுதியாண்டு வேளாண்மை மாணவிகள் பத்மஸ்ரீ ஜோதி.ச, கமலேஸ்வரி.அ, அபர்ணா தேவி.ரா, பிரியதர்ஷினி.பூ, யாழினி.த, ஞானமதி.கு ஆகியோர் கலந்து கொண்டு, மண்பரிசோதனை குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தினர்.




கிராம ஊராட்சித் தலைவர் ராம்குமார், துணைத் தலைவர், வார்டு உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்ட இக்கூட்டத்தில், மாணவிகள் மண்பரிசோதனையின் அவசியம், அதன் நோக்கங்கள், மண்மாதிரி எடுக்க ஏற்ற காலம், மண்மாதிரி எடுக்க வேண்டிய மற்றும் எடுக்கக்கூடாத இடங்கள் குறித்து விளக்கமளித்தனர். மேலும், விளக்கப் படங்கள் மற்றும் வரைபடங்களின் (Diagrams) உதவியுடன், மண்மாதிரி எடுக்கும் படிப்படியான செயல்முறையை பொதுமக்களுக்கு எடுத்துரைத் தனர். மண்மாதிரி எடுப்பதற்குப் பயன்படுத்தப்படும் மண் வெட்டி, கடப்பாரை, மண்மாதிரி சேகரிப்பு குழாய் (Soil Auger), வாளி மற்றும் மாதிரி சேகரிப்பு பை உள்ளிட்ட கருவிகள், அவற்றின் பயன்பாடு மற்றும் சரியான முறையில் பயன்படுத்தும் விதம் குறித்தும் விளக்கினர்.

மண்பரிசோதனையின் மூலம் பயிர்களுக்கு தேவையான சத்துக்களை துல்லியமாக அறிந்து, உரங்கள் மற்றும் இயற்கை உரங்களை தேவையான அளவில் மட்டுமே பயன்படுத்துவதன் மூலம் தேவையற்ற செலவினங்களை குறைக்கலாம், மண் வளத்தை பாதுகாக்கலாம், பயிர் வளர்ச்சி, மகசூல் மற்றும் விளைபொருளின் தரத்தை மேம்படுத்தலாம் என்பதையும் எடுத்துரைத்தனர். மேலும், மண் மாதிரியை அரசு மண் பரிசோதனை ஆய்வகங்கள் அல்லது அருகிலுள்ள வேளாண்மை அலுவலகங்களில் சமர்ப்பிக்கும் முறை, 7 முதல் 15 நாட்களுக்குள் பரிசோதனை அறிக்கை கிடைக்கும் என்பது, அந்த அறிக்கையில் மண்ணின் கார/அமிலத்தன்மை (pH), மின்கடத்துத்திறன் (EC), கரிம கார்பன், நைட்ரஜன், பாஸ்பரஸ், பொட்டாசியம் மற்றும் நுண்ணூட்டச் சத்துக்கள் போன்ற விவரங்கள் இடம் பெறும் என்பதையும் விளக்கினர். அந்த முடிவுகளின் அடிப்படையில் உர மேலாண்மையை மேற் கொள்வதன் மூலம் மண்வளத்தை மேம்படுத்தி, அதிக மகசூலுடன் தரமான விளைபொருட்களைப் பெறமுடியும் என தெரிவித்தனர்.

நிகழ்ச்சியின் முடிவில், மண்பரிசோதனை தொடர்பான பொது மக்களின் சந்தேகங்களுக்கு மாணவிகள் விளக்கமளித்ததுடன், விவசாயிகள் அரசுமண்பரிசோதனை சேவைகளை முழுமை யாகப் பயன்படுத்தி அறிவியல் அடிப்படையிலான சாகுபடி முறைகளை பின்பற்றுமாறு அறிவுறுத்தினர்.



Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர்,
  ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# நானோ உர விற்பனையாளர்கள் கருத்தரங்கம்



சேலம், ஜூலை 30

சேலம் மாவட்டத்தில் இந்தியா உழவர் உர கூட்டுறவு நிறுவனம் மற்றும் சக்தி பெர்டிலைசர்ஸ் & கெமிக்கல்ஸ் இணைந்து உர விற்பனையாளர்களுக்கான கருத்தரங்கம் நடைப்பெற்றது. இந்நிகழ்ச்சி இப்கோ மாநில விற்பனை மேலாளர் ந.சுரேஷ் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சக்தி உர விற்பனையாளர், இப்கோ துணை மேலாளர் வர்கீஸ், இப்கோ கள அதிகாரிகள் அப்துல்ரஹ்மான், பொம்மண்ணன், அருள்மணி, வினோத் மற்றும் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த உர விற்பனையாளர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் இப்கோ மாநில விற்பனை மேலாளர் ந.சுரேஷ், இப்கோ நானோ யூரியா, நானோ டிஏபி, நானோ ஜிங்க் மற்றும் நானோ காப்பர் ஆகிய திரவ உரங்களின் நன்மைகள், பயன்படுத்தும் முறை மற்றும் விவசாயிகளுக்கான காப்பீட்டுத் திட்டமான சங்கட் ஹரன் பீமா யோஜனா குறித்து விளக்கமளித்தார். மேலும், சொட்டுநீர்ப் பாசன உரங்கள் (WSF) மற்றும் உயிர் உரங்களின் முக்கியத்துவம் மற்றும் சரியான பயன்பாட்டு முறைகள் குறித்து இப்கோ கள அதிகாரிகள் விரிவாக எடுத்துரைத்தனர்.

இதனைத் தொடர்ந்து உர விற்பனையாளர்கள் மற்றும் இப்கோ அதிகாரிகள் இடையே விவசாயிகளின் தேவைகள், நவீன நானோ உரப் பயன்பாடுமற்றும் வேளாண் தொழில்நுட்பங்கள் குறித்து கலந்துரையாடல் நடைபெற்றது. இதன் மூலம் நானோ திரவ உரங்கள், சொட்டுநீர்ப் பாசன உரங்கள் மற்றும் உயிர் உரங்களை சரியான முறையில் பயன்படுத்தி விவசாயிகள் குறைந்த செலவில் அதிக மகசூல் பெறுவதற்கான வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டன.

# மண்வள மேலாண்மை குறித்த விவசாயிகள் பயிற்சி



சிவகங்கை, ஜூலை 30

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டாரம், தவத்தாரேந்தல்-வலையபட்டி (அம்பலத்தாழி) கிராமத்தில் (30.07.26) அன்று வேளாண்மைத் துறையின் சார்பில் அட்மா விரிவாக்க சீரமைப்பு திட்டத்தின் கீழ் மண்வள மேலாண்மை பற்றிய உள்மாவட்ட விவசாயிகளுக்கு பயிற்சி நடைபெற்றது.

பயிற்சியில் இப்பயிற்சியில் திருப்புவனம் வேளாண்மை உதவி இயக்குநர் தா.மலர்விழி, வரவேற்புரையாற்றினார். மண்வள பாதுகாப்பு, பசுந்தாள் உரப்பயிர்கள் சாகுபடி தொழில்நுட்பம் குறித்து தொழில்நுட்ப உரையாற்றினார். சிவகங்கை வேளாண்மை இணை இயக்குநர் (உழவர் பயிற்சி நிலையம்) செல்வம், தலைமையேற்று பயிற்சியில் பசுந்தாள் உரப்பயிர்களை சாகுபடி செய்து மடக்கி உழுவதால் மண்வளம் பாதுகாக்கப்படுவதுடன் உரச்செலவு பெருமளவு குறைவதாகவும் தெரிவித்தார். வேளாண்மை அலுவலர் (ஓய்வு) குணசேகரன், மண்மாதிரி எடுத்தலின் அவசியம் குறித்தும், மேலும் உயிர் உரங்கள் அங்கக உரங்களை பயன்படுத்தி மண்ணின் வளத்தை காக்க வேண்டும் என்றும் நுண்ணூட்ட சத்தினை இடுவதால் ஏற்படும் நன்மைகள் பற்றியும் எடுத்துரைத்தார். அட்மா திட்ட பணியாளர்கள் பயிற்சிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர். விவசாயிகள் பலர் ஆர்வமுடன் கலந்து கொண்டனர்.

# குறுவை நெல் சாகுபடியில் தொழில்நுட்ப முறைகளை கடைப்பிடிக்க வேளாண்மைத் துறை அறிவுரை

திருவள்ளூர், ஜூலை 30

குறுவை பருவ நெல் சாகுபடியில் அதிக மகசூல் பெற, விவசாயிகள் தரமான சான்றளிக்கப்பட்ட விதைகளைத் தேர்வு செய்து விதை நேர்த்தி செய்து விதைக்க வேண்டும் என வேளாண்மைத் துறையினர் அறிவுறுத்தியுள்ளனர். நாற்றங்கால் அமைப்பதற்கு முன் விதைகளை உயிரி உரங்கள் மற்றும் பூஞ்சாணக் கொல்லிகளால் விதை நேர்த்தி செய்வது நோய் தாக்குதலைக் குறைக்க உதவும். மண் பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் உரமிடுதல் மேற்கொள்வதுடன், ஏக்கருக்கு 18-20 நாட்கள் வயதுடைய நாற்றுகளை 2-3 நாற்றுகள் வீதம் 20 X 10 செ.மீ. இடைவெளியில் நடவு செய்ய வேண்டும்.

நீர் பயன்பாட்டைச் சிக்கனமாக்க, மாற்றி மாற்றி பாசனம் (Alternate Wetting and Drying) முறையைப் பின்பற்றலாம். மேலும், களை களைக் கட்டுப்படுத்த கோனோ வீடர் அல்லது பரிந்துரைக்கப்பட்ட களைக்கொல்லிகளைப் பயன்படுத்துவது பயனளிக்கும். இலைச் சுருட்டுப் புழு, தண்டு துளைப்பான் மற்றும் பழுப்பு தத்துப்பூச்சி போன்ற பூச்சிகளின் தாக்குதலை வயலில் தொடர்ந்து கண்காணித்து, ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளைப் பின்பற்ற வேண்டும். தொழில்நுட்ப பரிந்துரைகளை கடைப்பிடிப்பதன் மூலம் குறுவை நெல் சாகுபடியில் அதிக மகசூலும், உயர்தர விளைச்சலும் பெறலாம் என திருவள்ளூர், விதை பரிசோதனை நிலைய மூத்த வேளாண்மை அதிகாரி தெரிவித்துள்ளார்.

